பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

29 07 2024 **MONDAY** **6.45 AM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மத்திய அரசின் திட்டங்களின் பலன்களை அதிகப்படுத்துவது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி, பிஜேபி ஆளும் மாநில முதலமைச்சர்கள் மற்றும் துணை முதலமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தினார்.
- உச்சநீதிமன்றம் தொடங்கி 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு, மக்கள் சிறப்பு நீதிமன்றத்திற்கு உச்சநீதிமன்றம் ஏற்பாடு செய்துள்ளது.
- தமிழகத்தில் பழைய பேருந்துகளுக்கு பதிலாக 7 ஆயிரத்து 500 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
- பொறியியல் மாணவர் சேர்க்கையில் சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு முடிந்துள்ள நிலையில், பொதுப்பிரிவினருக்கான இணையவழி கலந்தாய்வு இன்று தொடங்குகிறது.
- இலங்கைக்கு எதிரான இரண்டாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<<<>>>>>

மத்திய அரசின் திட்டங்களின் பலன்களை அதிகப்படுத்துவது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி, பிஜேபி ஆளும் மாநில முதலமைச்சர்கள் மற்றும் துணை முதலமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

புதுதில்லியில கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற இந்த கூட்டத்தில் நேற்று நிறைவுரையாற்றிய அவர், மாநில அரசு நிர்வாகத்தை செம்மைப்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கினார்.

இம்மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் சிறந்த நிர்வாகத்திற்கான நடைமுறைகள் மற்றும் மக்கள் நலத்திட்டங்கள் குறித்தும் இந்த கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

மத்திய அரசின் திட்டங்கள் மிகவும் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றை மாநிலங்களில் அமல்படுத்தும்போது மாற்றம் எதுவும் செய்யக்கூடாது என்றும் இந்த கூட்டத்தில் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

இந்த கூட்டத்தில் பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா மற்றும் அக்கட்சியின் மூத்த தலைவர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு அமித் ஷா, உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

<<<<<<<>>>>>

தேசிய கல்விக்கொள்கை அமலுக்கு வந்து இன்றுடன் நான்காண்டுகள் நிறைவடைகிறது.

இதையொட்டி, புதுதில்லியில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில், மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கலந்துகொண்டு, கல்வித்துறை சார்பில் பல்வேறு முன்முயற்சிகளை தொடங்கிவைக்கிறார்.

தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகளை கற்றுக்கொள்வதற்காக தனித்துவமான கல்வி தொலைக்காட்சி அலைவரிசைகளை அவர் அறிமுகப்படுத்துகிறார்.

பள்ளிக்கல்வியை மன அழுத்தம் இல்லாமல், மகிழ்ச்சியுடன் கற்றலுக்கான முன் முயற்சிகளையும், உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கான வழிகாட்டுதல்களையும் அவர் தொடங்கிவைக்க உள்ளார்.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் அறிவாற்றலை மேம்படுத்தும் வகையில் புத்தகங்களையும் அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் வெளியிட உள்ளார்.

<<<<<<<>>>>>

உச்சநீதிமன்றம் தொடங்கி 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு, மக்கள் சிறப்பு நீதிமன்றத்திற்கு உச்சநீதிமன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதி கே வி விஸ்வநாதன் எமது செய்தியாளருக்கு அளித்துள்ள சிறப்பு பேட்டியில் இதனை தெரிவித்துள்ளார்.

*(சவுண்ட் பைட் - கே வி விஸ்வநாதன் - 50 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தில் பழைய பேருந்துகளுக்கு பதிலாக 7 ஆயிரத்து 500 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் அத்தனூர் பேரூராட்சியில் பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கிவைத்து பேசிய அமைச்சர், தற்போது ஆயிரம் புதிய பேருந்துகள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பழைய பேருந்துகளுக்கு பதிலாக மேலும் புதிய பேருந்துகள் படிப்படியாக பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

போக்குவரத்துத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

கர்நாடக அணைகளிலிருந்து காவிரியில் திறந்துவிடப்பட்ட தண்ணீரின் அளவு இன்று காலை நிலவரப்படி வினாடிக்கு ஒரு லட்சத்து 45 ஆயிரம் கனஅடியாக குறைந்துள்ளது.

நேற்று வினாடிக்கு ஒரு லட்சத்து 60 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது.

இதன் காரணமாக, மேட்டூர் அணை வேகமாக நிரம்பி, 110 அடியை எட்டியுள்ள நிலையில், டெல்டா பாசனத்திற்காக அணையிலிருந்து நேற்று மாலை முதல் வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, காவிரி கரையோரம் உள்ள மாவட்டங்களில் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

கரையோரம் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லுமாறு மாவட்ட நிர்வாகங்களை, மாநில வருவாய் மற்றும் பேரிடர் நிர்வாகத்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

காவிரியில் அதிகமான தண்ணீர் வருவதால் ஆற்றில் இறங்கவோ, குளிக்கவோ கூடாது என்று நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி உமா அறிவுறுத்தியுள்ளார்.

*(சவுண்ட் பைட் - உமா — 50 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

பொறியியல் மாணவர் சேர்க்கையில் சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு முடிந்துள்ள நிலையில், பொதுப்பிரிவினருக்கான இணையவழி கலந்தாய்வு இன்று தொடங்குகிறது.

இந்த கலந்தாய்வு மூன்று சுற்றுகளாக அடுத்த மாதம் 3-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

தொழில் கல்வி பிரிவு மாணவர்களுக்கான கலந்தாய்வும் இன்று தொடங்கவுள்ளது.

அடுத்த மாதம் 10-ஆம் தேதிவரை நடைபெறும் இந்த கலந்தாய்வு ஒரே சுற்றாக நடத்தப்படும்.

<<<<<<<>>>>>

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை அமராவதி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

அணை முழு கொள்ளளவை எட்ட உள்ளதால், அணைக்கு வரும் உபரி நீர் முழுவதும் அமராவதி ஆற்றில் திறந்துவிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கரூர் மாநகராட்சியையொட்டிய ஆண்டான் கோவில் தடுப்பணைக்கு ஒரே நாளில் வினாடிக்கு ஆயிரத்து 883 கனஅடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

<<<<<<<>>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

டோக்கியோவில் இன்று குவாட் அமைப்பின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கலந்துகொள்ளும் கூட்டத்தில், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் பங்கேற்கிறார்.

**<<<<<<<>>>>>**

காஷ்மீர் பள்ளத்தாக்கில் பனி லிங்கத்தை தரிசிக்க ஆயிரத்து 832 யாத்ரிகர்கள் கொண்ட மற்றொரு குழு ஜம்முவிலிருந்து புறப்பட்டு சென்றுள்ளது.

**<<<<<<<>>>>>**

அஸ்ஸாம் மாநிலத்தில் காவல்துறையினர் ஒன்பது கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்களை பறிமுதல் செய்துள்ளனர்.

**<<<<<<<>>>>>**

சிவகங்கை மாவட்டம் குன்றக்குடி அருகே நேற்று நடைபெற்ற வடமாடு மஞ்சுவிரட்டு நிகழ்ச்சியில் காளை முட்டி, மாடுபிடி வீரர் ஒருவர் உயிரிழந்தார்.

**<<<<<<<>>>>>**

குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், சுற்றுலாப்பயணிகள் அருவிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<<>>>>>**

ஆடி கிருத்திகையை முன்னிட்டு, இன்று முருகன் கோவில்களில் சிறப்பு பூஜைகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**<<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

**Pallekele**-ல் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், முதலில் விளையாடிய இலங்கை, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 161 ரன் எடுத்தது.

162 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா விளையாட இருந்தபோது, மழை பெய்ததால் வெற்றி இலக்கு மாற்றியமைக்கப்பட்டது.

எட்டு ஓவரில், 78 ரன் எடுத்தால் வெற்றி என்ற மாற்றியமைக்கப்பட்ட இலக்குடன் விளையாடிய இந்தியா, ஒன்பது பந்துகள் மீதம் இருக்கையில், மூன்று விக்கெட் இழப்பிற்கு, 81 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

இதையடுத்து, மூன்று போட்டிகள் கொண்ட தொடரை 2-0 என்ற கணக்கில், இந்தியா கைப்பற்றியது.

இரு அணிகளுக்கு இடையிலான கடைசி டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையே மூன்று ஒருநாள் போட்டித்தொடரும் கொழும்புவில் நடைபெறவுள்ளது.

**<<<<<<<>>>>>**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் துப்பாக்கிச்சுடுதலில் பல்வேறு பிரிவுகளில் இந்தியா இன்று பங்கேற்கிறது.

மகளிர் பத்து மீட்டர் ஏர் ரைபிள் இறுதிப்போட்டியில் இந்தியாவின் ரமிதா ஜிண்டால் பங்கேற்கிறார்.

**<<<<<<<>>>>>**